(Chapter XVII BNSS)

-------

IN THE COURT OF **DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, THIRUCHULI**

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | M.C.7/2024 |
| Deposition of witness for | :: | PW.1 |
| Name | : | சண்முகஜோதி |
| Father's /Husband's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day February of 2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

1. எதிர்மனுதாரர் வேலை செய்யும் நிறுவனத்திற்கு எப்போது சென்றேன் என்றால் ஜனவரி மாதம் 2022ம் வருடம் சென்றேன். அப்போது எனது கணவர் என்னிடம் இரண்டு வெற்று பத்திரத்தை காண்பித்து அதில் கையொப்பம் போட்டுக் கொடுத்தால்தான் சேர்ந்து வாழ்வதாக என்னிடம் கூறியதாக எனது மனுவில் தெரிவித்துள்ளநிலையில் என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கையொப்பம் செய்த ஆவணமா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணங்கள் எங்கே என்றால் நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்து

கொடுக்கவில்லை. மதுரையில் ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் நானும் எனது பெற்றோரும் சேர்ந்து எதிர்மனுதாரரை மணமுறிவு பத்திரம் எழுதிக் கொள்வோம் என்று அழைத்தோமா என்றால் இல்லை. அந்த மணமுறிவு ஒப்பந்தத்தை அருப்புக்கோட்டை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் எங்களுக்குள் நடைபெறும் விவகாரத்து வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. மணமுறிவு ஒப்பந்தம் எதிர்மனுதாரை நானும் எனது பெற்றோரும் எதிர்மனுதாரை அழைத்து மதுரையில் ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதி கையொப்பம் பெற்றுள்ளோம் என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தம் எழுதி கொடுத்தபின்னர் எதிர்மனுதாரர் வேலை பார்த்த பள்ளியில் சுவர் ஏறி குதித்து அவரிடம் சென்று பிரச்சனை செய்தேனா என்றால் இல்லை, வாசல் வழியாகதான் சென்றேன். நான் அங்கு சென்றபோது இரவு 10.30மணி இருக்குமா என்றால் இல்லை, மாலை 5.30மணி இருக்கும். மணமுறிவு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் 01.01.2023ம் தேதியன்று இரவு 10.30மணிக்கு சுவர் ஏறி குதித்து சென்றதினால் எனது குடும்பத்தகராறில் பள்ளியின் மீது கலங்கம் ஏற்படுத்தினார் என்று எதிர்மனுதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பணியில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் இல்லை, அவர் தற்போதும் அங்கு தான் பணியில் உள்ளார். தேனி மாவட்டம் குடும்ப நல நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தங்களது பள்ளியில் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று பள்ளி நிர்வாகமே திறந்த நீதிமன்றத்தில் சான்றிதழை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது மோசடியானது ஆகும். அந்த சான்றிதழை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த ஆவணமா என்றால் ஆமாம், ஆனால் அதில்

உள்ளவை அனைத்தும் பொய் ஆகும். எதிர்மனுதாரர் ஊரான ராசிங்காபுரத்திற்கு சென்று நான் தகராறு செய்தேனா என்றால் தகராறு செய்யவில்லை, சமாதானம் பேசதான் சென்றேன். எனது கணவர் நான் தகராறு செய்ததாக அனைத்து மகளிர் காவல் நிலையம் போடியில் 27.06.2022ம் தேதி என் மீது புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம்.

2. திருமணமுறிவு பத்திரம் எழுதியபின்பு அதே தேதியில் எதிர்மனுதாரர் வீட்டில் உள்ள எனது நகைகளை எடுத்து சென்றுவிட்டீர்கள் என்றால் இல்லை, எனது நகைகள் முதலில் என்னிடம்தான் உள்ளது. அதே தேதியில் தாலியை கழட்டி எனது கணவரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, எனது கணவரின் தங்கை கேட்டுக்கொண்டதால் என் பெற்றோர் என்னிடம் வற்புறுத்தி தாலியை கழட்டி எனது கணவரிடம் கொடுத்தனர். மேற்சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் சேர்ந்து ஒத்துக்கொண்டுதான் மணமுறிவு பத்திரம் ஏற்படுத்திக் கொண்டு எனது தாலியை அவரிடம் கழட்டி கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் என் மீது போடி மற்றும் திருச்சுழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். எதிர்மனுதாரர் திருச்சுழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தார் என்றால் என்னிடம் விவகாரத்து வேண்டும் என்பதற்காக அதனை பதிவு செய்யவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக புகார் கொடுத்துள்ளார். என்னுடைய நடவடிக்கையினால் எனது கணவர் வேலையை இழந்து காவல் நிலையங்களில் புகார்களை அளித்ததின் மூலமாக திருமண மணமுறிவு பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாகவும், திருமணத்திற்கு ஆதாரமான தாலியை கழட்டிக் கொடுத்ததினாலும், பெருத்த மனஉளைச்சலில் இருந்து என்னுடன் வாழவே முடியாது என்ற

முடிவுக்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. தேனி குடும்ப நல நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் நான் இடைக்காலமாக தாக்கல் செய்துள்ள ஜீவனாம்ச மனுவினை தற்போது வரை திரும்ப பெறவில்லை என்றால் சரிதான். நான் B.A படித்துள்ளேன். நான் திண்டுக்கல்லில் வசித்து வருகிறேன். நான் தற்போதும் அதே மருந்த கடையில் வேலை பார்த்து வருகிறேனா என்றால் இல்லை, உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இரண்டு மாதமாக வேலைக்கு செல்லவில்லை. எனக்கு வயிறு வலி உள்ளது. தற்போது நான் ரூ.6000/- வரை சம்பளம் வாங்கிக் கொண்டுதான் வருகிறேன் என்றாலும் ஜீவனாம்சம் பெறவேண்டும் என்பதற்காக வேலைக்கு செல்லவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மகரிஷி கல்வி நிறுவனத்தில் HR ஆக வேலை பார்த்து மாதம் ரூ.50000/- வரை சம்பளம் பெறுவதற்கும், ராசிங்காபுரத்தில் சொந்த வீடு உள்ளதற்கும், கையிருப்பில் ரூ.10லட்சம் ரொக்கமாக வைத்துள்ளார் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் எதிர்மனுதார் மாதம் ரூ.50000/- வரை சம்பளம் பெறவில்லை என்றாலும் ராசிங்காபுரத்தில் சொந்த வீடு இல்லை என்றாலும் ரூ.10லட்சம் கையிருப்பு இல்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் தங்கை மதுரையில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மனுவில் ஜீவனாம்சம் தொடர்பாக கூறியுள்ளவற்றை தவிர மற்ற விபரங்கள் அனைத்தும் இந்த மனுவிற்கு அவசியமற்றது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரோ, அவரது தங்கையோ, அவரது பெற்றோரோ எந்த காலத்திலும் என்னை வீட்டை விட்டு அனுப்பியது கிடையாது என்றாலும் நான்தான் திருமண முறிவு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டு, தாலியை கழட்டிக் கொடுத்துவிட்டு வந்தேன் என்றாலும் சரியல்ல.

3. நான் அருப்புக்கோட்டை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் கடந்த 29.01.2026ம் தேதியன்று எதிர்மனுதாரிடம் பிரச்சனை செய்ததாக அவர் அங்கு பாதுகாப்பில் இருந்த காவலரிடம் தகவல் தெரிவித்தாரா என்றால் இல்லை, சமாதானம் பேசதான் சென்றேன். அந்த காவலர் எனக்கு அறிவுரை வழங்கினாரா என்றால் இல்லை, நீதிமன்றம் மூலம் சமாதானம் பேச சொன்னார். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அதே நீதிமன்றத்தில் விசாரணையின்போது எதிர்மனுதாரரின் கழுத்தை பிடிக்க சென்றேன் என்றால் அவரது கழுத்தில் உள்ள ருத்ராட்சத்தை தொடச்சென்றேன். எனது நடவடிக்கைகளால் எனது பெற்றோர் எனக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை, நான் மேஜர் என்பதால் எனது வாழ்க்கையை நீதிமன்றம் மூலம் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். காவல் நிலையத்தில் வைத்து எனது பெற்றோர் "நாங்கள் எனது மகளை பராமரிக்க இயலாததால் அவர் விருதுநகரில் உள்ள மகளிர் காப்பகத்தில் செல்கிறேன் என கூறினார், அதை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம் " என தெரிவிக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த புகார் அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது பெற்றோர் கொடுத்தது என்றால் இல்லை, நான் நீதிமன்ற சம்மன் அங்கே செல்வதால் புகார் கொடுத்தேன். அந்த புகார்மனுவின் விசாரணையில் எனது மகள் எனது வீட்டில் எங்களை துன்புறுத்துகிறார், அசிங்கமான வார்த்தைகளால் திட்டுகிறாள் என்று கூறியுள்ளார்கள் என்றால் வேறு வாழ்க்கையை பார்க்க சொன்னார்கள், நான் எனது கணவரிடம் வாழ்வேன் என்று சொன்னேன். என்னுடைய இயற்கைக்கு முரணான பண்பினாலும், ஒரு மனைவி கணவனிடம் நடந்து கொள்ளும் முறையில் இல்லாமல்

அதிகார தோரணையில் இருந்து வந்ததால்தான் எனது கணவர் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பண்பினால்தான் எனது பெற்றோர் என்னை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் படித்த படிப்பிற்கு என்னால் வேலை பார்க்க இயலும் என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அருப்புக்கோட்டை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் கடந்த மாதம் வரை ரூ.5000/– ஜீவனாம்சம் பெற்றுக் கொண்டு இந்த வழக்கை தேவையில்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள ஜீவனாம்சம் கொடுக்கும் அளவிற்கு எனது கணவருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.